DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No. 180/2022 | Deposition of Witness for : PW5 |
| Name : இசக்கிமுத்து | Father/Husband Name : முருகன் |
| Age : 36 | Village : நாசரேத் |
| Taluk : ஏரல் | Calling : பந்தல் அமைப்பாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18 August 2025
Accused absent. Petition U/s. 317 Cr.P.C filed and allowed.

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது நாசரேத்தில் குடியிருந்து பந்தல் மற்றும் ரேடியோ செட் அமைக்கும் பணி செய்து வருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக தீபாவளி பண்டிகையையொட்டி, எங்கள் வீடு அமைந்திருக்கும் மில் ரோடு, நாசரேத் மாணிக்கவாசகபுரம் அம்மன் கோவில் அருகில் பந்தல் மற்றும் ரேடியோ செட் அமைத்து, டியூப் லைட், சீரியல் லைட்டுகள் அமைத்திருந்தேன்.

2. இவ்வழக்கு எதிரி என்னுடைய மாமியாரான அ.சா.1 ஐ பிடித்து அவரது இரு கன்னத்திலும் அடித்து கீழே தள்ளியதில் அவருக்கு பின் தலையில் காயம் ஏற்பட்டது. காயம் பட்ட என் மாமியார் அ.சா.1 ஐ நாசரேத் லூக்கா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அங்கு அ.சா.1 ஐ பரிசோதித்து பார்த்த மருத்துவர் அவரை மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு பரிந்துரைத்தார். அங்கு அவருக்கு சுமார் ஒரு மாதத்திற்கு மேல் சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்பு சில நாட்கள் ஓய்வில் இருந்தார்கள். வழக்கு சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

3. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு போன் கால் மூலம் ஒருவர் தெரிவித்ததால் நான் உடனடியாக சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தேன். இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் பிரச்சனைக்கு முக்கிய காரணம் பக்கத்து தெருவில் ஏற்பட்ட பிரச்சனை என்றால் சரிதான்.

4. அ.சா.1 என் மாமியாருக்கு இருதய பிரச்சனை இருந்து வந்துள்ளதா என்றால் இந்த அடி பட்டதால் தான் அவருக்கு இருதய பிரச்சனை வந்தது. என் மாமியார் அ.சா.1 க்கு பி.பி மற்றும் சுகர் போன்ற பிரச்சனைகளை இருக்கிறதா என்றால் அவருக்கு ஏற்கனவே அந்த பிரச்சனைகள் உண்டு. பி.பி மற்றும் சுகர் இருந்ததால் தான் அவருக்கு இருதய பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவருக்கு இவ்வழக்கு சம்பவத்தால் தான் இருதய பிரச்சனை ஏற்பட்டது. அவருக்கு இருதயத்தில் ஆப்பரேஷன் நடந்ததா என்றால் அவருக்கு ஆஞ்சியோ பிளாஸ்டி சிகிச்சை செய்து இருதயத்தில் ஸ்டண்ட் பொருத்தப்பட்டுள்ளது. இந்த ஆஞ்சியோ பிளாஸ்டி சிகிச்சை செய்து இருதயத்தில் ஸ்டண்ட் வைப்பதற்காக தான் அவர் மருத்துவமனையில் தங்கினாரா என்றால் சரிதான்.

5. போலீசார் வாக்குமூலத்தில் என் மாமியார் அ.சா.1 படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தார்களா என்றால் இல்லை, அவர் மயக்க நிலையில் இருந்தார். அ.சா.1 என் மாமியார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.08.18 17:35:35 +0530

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct. DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.08.18 17:35:43 +0530

Judicial Magistrate, Sathankulam.